பொதுஜன பாதுகாப்புச் சட்டம் செல்லாக்காசு ஆகிவிட்டது!

இதனை உபயோகிப்பது அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகும்

—(0)—

இந்திய அரசியல் திட்டமே இதற்கு இடந்தரவில்லை

—(0)—

காவலில்வைத்திருக்கும் மனுதாரர்களை உடனே விடுதலை செய்க

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு

"சென்னை பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத் (1949) தின் சில பகுதிகள் இந்திய அரசியலமைப்பில் வழங்கப்படும் குடிமக்கள் உரிமைக்கு முரணாக இருப்பதால் செல்லுபடியாகாது" என்று தோழர் எம். ஆர். வெங்கட்ராமன் என்னும் கம்யூனிஸ்டுக் காவல்கைதி செய்துகொண்ட 'ஹேபியஸ் கார்பஸ்' மனுவின்மீது தீர்ப்பளிக்கையில் நேற்று தோழர்கள் கோவிந்தமேனன், கிருஷ்ணசாமி நாயுடு ஆகிய இரு நீதிபதிகளும் அறிவித்தார்கள்.

1950-ம் ஆண்டு ஜனவரி 26-ந்தேதி இந்திய ஜனாதிபதி பாதுகாப்பை யொட்டிச் சிறையிலடைக்கும் சட்டம், தொடர்ந்து அமுலில் இருக்குமென்று கூறியதும் செல்லுபடியாகாதென்று நீதிபதிகள் கூறினார்கள்.

சென்னைப் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டம் ரத்து செய்யப்பட்டு 1950 ஆண்டு சிறைப்படுத்தும், சட்டத்தின்படித்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கப்பட்டதென்று கூறப்பட்டதற்கு நீதிபதிகள் ஒன்றும் கூறவில்லை.

சட்டசபை அங்கத்தினர் கம்யூனிஸ்டுத் தோழர் வெங்கடேஸ்வரலு செய்துகொண்ட ஹேபியஸ் கார்பஸ் மனுவின் மீதும், இதேபோன்று தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பளிப்பதில் இரு நீதிபதிகளும் ஒருமுகமான அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

தோழர் நீதிபதி கோவிந்தமேனன் தீர்ப்பைப் பற்றி கூறியதாவது:— 1949-ம் வருடத்திய சென்னைபொதுஜன பாதுகாப்புச் சட்டம் இந்திய அரசியல் திட்டத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இந்த நீதிமன்றத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு, ஒரு தனிப்பட்ட நபரின் சாதாரண உரிமை இச்சட்டம் பறிப்பதாக இருப்பதால், இதைச் சட்ட விரோதமானதென்று முடிவு கூறுகிறோம். காவலில் வைத்திருப்பவர் உடனே விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கிறோம்.

சென்னை பொதுஜனப்பாதுகாப்புச் சட்டத்தின் பகுதிகளைப் பற்றி விவரித்துக் கூறுகையில், "இந்திய அரசியலமைப்பின்படி பல நிபந்தனைகள் திருப்திசெய்யப்பட்டால், ஒருவர் 3 மாதம் காவலில் வைக்கப்படலாம். ஆனால் அவ்வாறு வைப்பதுகூட சட்டபூர்வமாகாது" என்று தான் கருதுவதாக அவர் அறிவித்தார்.

"ஒரு சட்டத்தில் சில பகுதி

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

பாலாறு, வைகை மீது பாலங்கள் கட்டும் திட்டம்

சென்னை சர்க்கார் யோசனை

சென்னை, மார்ச். 28—

செங்கற்பட்டு ஜில்லாவில் பாயும் பாலாறு மீது ரூ 20,00 000 செலவில் ஒரு பாலம் கட்டவும், மதுரையில் பாயும் வைகை மீது ரூ 12,00,000 செலவில் ஒரு பாலம் கட்டவும் சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

இவைகள் அடுத்த வருஷத்தில் கட்ட ஆரம்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

விஜயவாடா அருகில் கிருஷ்ணா நதிமீது ரூ 50,00,000 செலவில் ஒரு பாலம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மங்களூர் அருகாமையில் பாயும் கூடலூர் மீது ரூ. 50,0000 செலவில் ஒரு பாலம் கட்ட டெண்டர்கள் கோரப்பட்டிருக்கிறது.

மனைவியைக் கொன்று தூக்குமேடை ஏறத் தயாரானர்!

லண்டன், மார்ச். 28—

1946-ல் தன் மனைவியை செருப்பால் அடித்துக்கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டவரும், பைத்தியம் என்று கருதப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவருமான [illegible] என்பவர், சட்ட ரீதியான பிரச்னையில் குற்றவாளியல்ல என்று தீர்ப்பு பெற்றுவிட்டார்.

தன் மனைவி வேறு ஒருவருடன் உறவாடியதற்காகவே தான் அம்மாதிரி செய்ததாகவும், தனக்கு பைத்தியமில்லையென்றும், தன்னை தூக்குமேடையில் ஏற்றலாம் என்று அவர் வாக்குமூலத்தில் கூறினாராம்.

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (29—3—50) வெளியூர் (30—3—50) [இதழ் 208

கல்கத்தாவில் மதவெறியர் ஆர்ப்பாட்டம்

ஹௌரா பகுதியில் ராணுவச் சட்டம் அமுல்

கல்கத்தா, மார்ச். 28—

கல்கத்தாவின் ஒரு பகுதியாக விளங்கும் ஹௌராவிலும், அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் நேற்று மாலை ராணுவச்சட்டம் அமுல் செய்யப்பட்டது. ஆளும் திறமையற்ற மேற்கு வங்காள அரசாங்கம் நிர்வாகத்தை, பிரிகேடியர் ரந்தவா என்னும் ராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்தது. மேற்கு வங்க முதல் மந்திரியும், உயர்ந்த ராணுவ அதிகாரிகளும் நீண்ட நேரம் கலந்தாலோசித்து இம்முடிவுக்கு வந்தனர்.

ஹௌரா, பல்லி, செராம்பூர் பகுதிகளில் ஒரே குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது. கொலையும் கொள்ளையும் தலைவிரித்தாடுகிறது. ரயிலில் பிரயாணம் செய்பவர்கள் திடீர் திடீரென்று தாக்கப்படுகிறார்கள் பல இடங்களில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. ஆகையால் தான், ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டதாம். ராணுவச்சட்டம் அமுலில் இருக்கும் பகுதிகளில், ராணுவத்தினர் அமைதியை நிலைநாட்ட என்னவேண்டுமானாலும் செய்யலாம்.

லில்லூா என்னும் பிரதேசத்தில் தொழிலாளர் பலர் கைது செய்யப்பட்டதால், ரயில்வே தொழிலாளர் பலர் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இப்பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டு பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இவர்களுக்கு உணவு வசதியும், வைத்திய வசதியும் செய்துதரப்படுகிறது.

அரசாங்கம் மக்களுக்கு விட்ட வேண்டுகோள் ஒன்றில், சிலர் மிருகத்தனமான குணம் படைத்தவர்களாக இருக்கிறார்களென்றும், இது உடனே நிறுத்தப்பட்டாலொழிய ஆட்சி நிலைப்பதே அரிதென்றும் கூறுகிறது.

பத்திரிகைகள் வகுப்புவெறி கிளப்பக்கூடிய செய்தியொன்றும் வெளியிடக் கூடாதென்று அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது.

ஹௌரா மூலமாக வரும் ரயில் வண்டிகளும், போகும் வண்டிகளும் பல நிறுத்தப்பட்டுவிட்டன. பஞ்சாப் மெயில், டில்லி மெயில் ஆகியவைகள் வேறு பாதையின் மூலம் அனுப்பப்பட்டது.

———

சிட்னி, மார்ச். 28—

பிரிஸ்பேனில் கம்யூனிஸ்டு தூண்டுதலால் ஸ்டிரைக் செய்த சுமார் 2000 துறைமுகத் தொழிலாளர்கள் சற்று தண்டனைக்கு பயந்து வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஜெக்கிலிருந்து அகதிகள் வெளியேற்றம்

லண்டன், மார்ச். 28—

ஜெக்கிலிருந்து ஏராளமாக வெளியேறுபவர்களைத் தடுக்க அதிகாரிகள் மும்முரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஜெக்கிலுள்ள மேற்கு ரஸ்தாக்கள் கம்யூனிஸ்ட் போலீசாரால் மூடப்பட்டுவிட்டன. எல்லைப் புறத்தில் காவல் கெடுபிடி அதிகரித்திருக்கிறது.

கான்பெரா மாநாடு

லண்டன், மார்ச். 28—

மே மாதத்தில் கான்பெரா (ஆஸ்திரேலியா)வில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா முக்கிய பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று 'மாஞ்செஸ்டர்கார்டியன்' பத்திரிகை எழுதியிருக்கிறது.

கம்யூனிஸ்ட் ஆபத்தை ஒழிக்கும் பிரதான நோக்கத்துடன் இம்மாநாடு கூட்டப்படவில்லை என்றும், ஆசியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அதைத் தொடர்ந்து டச்சுகளும் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளியேறியதால் செய்யப்பட வேண்டிய பொருளாதார சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்யும் முக்கிய நோக்கத்துடன் தான் இம்மாநாடு கூட்டப்படுகிறதென்றும் அப்பத்திரிகை எழுதுகிறது.

கம்யூனிஸ்டுகளை ஒடுக்கப்போகிறார்களாம்!

தெ. ஆ. பார்லிமெண்டில் மசோதா கொண்டுவரப்படும்

கேப்டவுன், மார்ச். 28—

தென்னாப்பிரிக்க பார்லிமெண்டில் கம்யூனிஸ்டுகளை ஒழிக்கும் மசோதா ஒன்றை, நீதி இலாகா மந்திரி ஸ்வார்ட் கொண்டுவரவிருக்கிறார்.

கம்யூனிஸத்தை எதிர்க்கும் காமன்வெல்த் முயற்சியில் இது ஒரு அம்சம் எனத் தெரிகிறது.

இதேமாதிரி ஆஸ்திரேலிய சர்க்காரும் ஒரு மசோதாவைக் கொண்டுவரவிருக்கிறது.

தென்னாப்பிரிக்காவின் மசோதா மூலம் சர்க்காருக்கு கம்யூனிஸ்டு நடவடிக்கைகளை ஒடுக்க அதிக அதிகாரம் கிடைக்கும் எனத் தெரிகிறது.

சரவாக் வெள்ளைராஜா கோரிக்கை

லண்டன், மார்ச். 28—

ஸெரட்ஸே காமாவை சில நிபந்தனைகளுடன் அவர் நாடு திரும்ப அனுமதித்ததுபோல், சரவாக்கிற்கு செல்ல தன்னையும் அனுமதிக்க வேண்டும் என்கிற சரவாக் வெள்ளை ராஜா அந்தோனி ப்ரூக்கின் கோரிக்கையை பிரிட்டிஷ் காலனி காரியாலயம் ஆலோசித்து வருகிறது.

1947ல் ஆரம்பித்த மின்னர் வாவிட்ட மானநஷ்ட வழக்கைத் தொடர்ந்து நடத்தவே தான் ஸரவாக் செல்ல விரும்புவதாகவும், அவ்வழக்கு முடிந்ததும் வெளியேறிவிடுவதாகவும் அவர் ஒரு பேட்டியில் கூறினார்.

"யாழ்ப்பாணம் தமிழருக்கே"

கண்ணியமான உரிமையை அரசாங்கம் மறுக்கக்கூடாது

யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் டாக்டர் ஆர். டி சில்வா பேசுகையில் "மக்கள் தங்களுடைய சொந்த மொழியில் தங்களுடைய பிரதேசம் நிர்வகிக்கப்படவேண்டுமென்று விரும்பினால், அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு. எனவே தமிழர் தாங்கள் அதிகமாய் வசிக்கும் பிரதேசம் தமிழிலேயே நிர்வகிக்கப்படவேண்டுமென விரும்பினால் அக்கோரிக்கையைக் கண்ணியமான முறையில் நிறைவேற்றிவைக்க வேண்டியது, முன்னேற்றகரமான நோக்கங்களுடைய அரசாங்கத்தின் கடமையாகும்" என்று கூறினர்.

டாக்டர் பெரியாரா பேசுகையில் "இந் நாட்டுக்கத்தியாவசியமாயிருக்கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கென கட்டிடங்களை நிர்மாணிப்பதில் ஒரு சில லட்சம் ரூபாய்களைப் பெறமுடியாமலிருக்கையில் 70 லட்ச ரூபாயில் பேராதேனியாவில் சர்வகலாசாலை யமைக்க விரயஞ் செய்யச் சித்தமாக இருக்கும் ஒரு அரசாங்கத்தைப்பற்றி நம்மால் என்னதான் கூறமுடியும்" என்று அவர் அறிவித்தார்.

மாலை மணி

சென்னை 29—3—50 புதன்கிழமை

அவசியந்தான்; ஆனல்...?

ஆட்சிமுறை செம்மையாக நடைபெற சட்டங்கள் மிகமிக இன்றியமையாதவை. ஆனல், அத்தகைய சட்டங்கள் ஆட்சி முறைக்கு துணைக்கருவிகளாக, ஆக்கவேலைகளுக்கு வழிகோலும் சக்தி வாய்ந்தவையாக, மனிதஉரிமைகளுக்குபாதுகாப்பளிக்கக்கூடியதாக, ஜனநாயகக் கோட்டையின் அரண்களாக அமைதல் வேண்டும். இன்றேல், 'சட்டம்' என்ற சொல்லிற்கே அர்த்தமில்லாது போகும்.

சட்டங்கள் மூலம் பொதுவாக நாட்டைத்தான் திருத்த இயலுமேயன்றி, தனிப்பட்ட மனித உள்ளங்களைத் திருத்த இயலாது. ஆனல், தனி மனித உள்ளங்கள் பண்படும் அளவுக்கு சட்டங்கள் அமையவேண்டுவது அவசியம். அப்படி அமையவேண்டுமானல், சட்டம் செய்யும் ஆட்சியாளர், நாட்டு நிலை, மக்கள் நிலை இவற்றை நன்கு ஆராய்ந்து, அதற்குரிய அடிப்படை காரணங்களையறிந்து சட்டமியற்ற முன்வரவேண்டும்.

நாட்டில் வறுமை குடிகொண்டிருக்கிறது; பஞ்சம வலுக்கிறது; பட்டினிச் சாவுகள் ஏற்படுகின்றன என்று சொல்லும்படியான நிலைமையில், திருட்டு குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைதர ஆட்சியாளர் சட்டமியற்றுவதாயிருந்தால் அந்த சட்டங்களால் எத்துணை நல்ல பலன் விளையும் எனபதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திருடுவது குற்றம்; அக்குற்றம் புரிவோருககு இன்ன தண்டனை என்று சட்டமியற்றுமுன், இச்சட்டம் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை ஆட்சியாளர் சிந்திக்கவேண்டும். அங்ஙனமே திருட்டுக் குற்றம் புரிய காரணமாயிருப்பது எது, எப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதன் திருட்டுக குறறம் புரிய துணிகிருன் என்பவைகளை ஆராய்ந்தறிதல் வேண்டும். அப்படி ஆராய்கின்றபோது, நூற்றுக்குத் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட குற்றவாளிகள் வறுமையின் காரணமாகவே குற்றவாளிகளாகிருர்கள் என்ற உண்மை தெள்ளிதிற் புலனுகும்.

இம்மாதிரி பார்த்துக் கொண்டே போனல், பஞ்சமா பாதகங்கள் என்று சொல்லப்படும் பெருங் குற்றங்கள் அனைத்துக்கும் அடிப்படை காரணங்கள் ஏராளமாகக் காணக்கிடைக்கும். இதனைச் சுருங்கச் சொல்லவேண்டுமானல் சமுதாய, பொருளாதார சீர்கேடுகளே குற்றங்களுக்குக் காரணம் என்ற முடிவுக்கே வரவேண்டியவர்களாவோம்.

எனவே, சட்டம் அதற்குரிய மதிப்பை பெறவேண்டுமானல் ஆட்சியாளர் சட்டம் செய்யப்புகுமுன் சமுதாய பொருளாதாரநிலைமைகளைப்பற்றி நன்கு அறிந்து அத்துறைகளில் காணப்படும் சீர்கேடுகளைக் களைய முற்படவேண்டும். சீர்கேடுகளை களையத்தான் சட்டங்கள் பயன்பட வேண்டுமேயன்றி, சீர்கேடுகள் காரணமாகக் குற்றம் புரிவோரைத் தண்டிப்பதற்காகவே சட்டம் என்ற நிலை இருத்தல் கூடாது.

இங்ஙனம் அடிப்படையில் மாற்றம் காணமல், குற்றமிழைப்போரைத் தண்டிப்பதற்கு மாத்திரமே சட்டம் என்ற நிலை நீடிக்குமானல், சட்டம் அதற்குரிய வலிமையை இழக்க நேரிடும்; சட்டத்தை மீறி குற்றம் புரிவோர் தொகை பெருகும். அதனல் ஆட்சிமுறையே சீர்கெட மார்க்கமுண்டாகும்.

இக்கருத்தினை உள்ளடக்கியே அண்மையில் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை பொது கூட்டம் ஒன்றில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி தோழர் இராஜமன்னர், இளைஞர்களுக்கு அறிவுரைதரும் முறையிலே, "எந்த நாடும் சட்டதிட்டங்களால்மட்டும் பெருமை அடைந்துவிட முடியாது. நாட்டின் நிர்வாகம் நன்கு நடைபெற சட்டம் உதவி புரியும். ஆனல் தனிப்பட்ட மனிதர்களின் முயற்சியும், சாதனையுமின்றி வெறும் சட்டத்தால் என்ன செய்ய முடியும்? குற்றம் செய்தவர்களைச் சட்டத்தினல் அரசாங்கம் தண்டிக்கலாம். ஆனல் தண்டனை கிடைக்குமே என்ற பயத்தால்மட்டும் குற்றமிழைக்காமலிருக்கின்றனர் என்ற நிலைமை இருத்தல்கூடவே கூடாது. குற்றம் புரிவது ஒழுங்கு முறைகளுக்கு ஊறு செய்வதாகும் என்ற நம்பிக்கையின் பேரில் மக்கள் தம்மைத் தாமே திருத்திக் கொள்ளவேண்டும். இங்ஙனம் திருந்திய மனப்பான்மை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு ஐக்கியப்படவேண்டும்" என்று பேசியுள்ளார்.

"தண்டனை கிடைக்குமே என்ற பயத்தால் மட்டும் குற்றம் செய்யாமலிருக்கிருர்கள் என்ற நிலைமை இருத்தல் கூடாது" என்று கூறும் தோழர் இராஜமன்னர், அதே சமயத்தில் "கட்டுப்பாடு அவசியம்; இளைஞர்கள் அரசாங்க சட்டங்களுக்கு மதிப்பு தரவேண்டும்" என்பதையும் வலியுறுத்திக் கூறுகிருர்.

சட்டத்துக்கு மதிப்புத்தர வேண்டுவது அவசியம் என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறேம். ஆனல், சட்டத்துக்கு மதிப்பு தரவேண்டும் என்ற நன்னேக்கத்துடன் வாழ விரும்பும் மக்களுக்கு நாட்டுப் பொருளாதார நிலையும் சமுதாய நிலையும் இடந்தருகின்றனவா என்பதையும் காணவேண்டும். நாணயமாக வாழ விரும்புவோருக்குநாட்டில் இடமில்லை, என்று சொல்லும்படியான நிலையில் முதலாளித்வத்தின் சுரண்டல் முறைகள் இருந்து வருகின்றன. நாளுக்கு நாள் வேலையில்லாத் திண்டாட்டம் வலுப்பெற்று வருகிறது நாட்டில் இந்நிலையை மாற்றியமைத்து, மக்களின் அடிப்படைதேவைகளேனும் பூர்த்தி செய்யப்படும்படியான சூழ்நிலை ஏற்படவேண்டும். இன்றேல் அல்லற்படும் மக்களின் உள்ளத்தில் அமைதி நிலவுவது கடினம். உள்ள அமைதியை இழந்த மக்கள் சட்டத்துக்கு மதிப்பு தருவர் என்று எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

சட்டம் அதற்குரிய மதிப்பை இழப்பதற்கு மற்றெரு காரணமும் உண்டு. அதாவது, ஆட்சியாளர் செய்யும் சட்டங்கள் மனித உரிமைகளைப் பறிக்கும் முறையிலே அமைவதாகும். ஜனநாயக ஆட்சியில் பேச எழுத மக்களுக்குப் போதிய உரிமைகள் வழங்கப்படவேண்டும். எக்காரணம் பற்றியும் இவ்வடிப்படை உரிமைகளுக்கு ஊறுதேடும் முறையில் அரசியலார் நடந்துகொள்ளக்கூடாது. அங்ஙனம் நடந்துகொள்ளுவார்களாயின்நாட்டில்உரிமைப் போராட்டங்கள் எழுவது இயல்பு. அத்தகைய உரிமைப் போராட்டங்களைத் தடுக்க வல்ல சட்டங்கள் எந்த நாட்டிலும் இருந்ததில்லை.

எனவே, மனித வாழ்க்கையின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத போதும், உரிமைகள் பறிபோகும் நிலை ஏற்படும் போதும் சட்டங்களைத் துச்சமாக மதிக்கும் மனப்பான்மை மக்களிடையே ஏற்படுவது இயற்கை என்பது ஒருதலை.

ஆகையால் நீதிபதிராஜமன்னர் அவர்களின் அறிவுரைப்படி சட்டத்துக்குமதிப்புதரும்மனப்பான்மை மக்களுக்கு ஏற்படவேண்டுமானல், ஆட்சியாளர் சட்டங்களைமட்டுமே துணையாகக்கொண்டு ஆட்சி நடத்தாமல், நாட்டு நிலையினையும் சீர்திருத்த முயலவேண்டும். சட்டத்துக்கு மதிப்பு தரவேண்டியவர்கள் மக்களல்ல. சட்டம் செய்யும் ஆட்சியாளரே முதலில் சட்டத்தின் மதிப்பை உணரவேண்டும். உணரவேண்டும் என்று சொன்னல், சட்டத்துக்கு மதிப்பு தரும்படியான சூழ்நிலை மக்களுக்கு ஏற்படும்படி செய்தல்வேண்டும். ஆகவே, 'சட்டத்துக்கு மதிப்பு தரவேண்டும்' என்றும் சொல்லும் ஆட்சியாளரைப் பார்த்து சொல்லுகிறேம் சட்டத்துக்கு மதிப்பு தர வேண்டுவது அவசியந்தான்; ஆனல்...?

அரபு மாணவர்கள் மாநாடு

லண்டன், மார்ச். 27—

கிரேட்பிரிட்டன் அரபு மாணவர் லீக் ஆதரவில் ஐரோப்பாவிலுள்ள அரபு மாணவர்கள் மாநாடு ஹாலந்திலுள்ள லேய்டனில் ஏப்ரல் 7 முதல் 21 வரை நடைபெறும்.

பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலுள்ள அரபு மாணவர்கள் சுமார் 65 பேர் இம்மாநாட்டில் கலந்துகொள்வர்.

திராவிடமுன்னேற்றதலைமை கழகச் செயற்குழுக் கூட்ட விவரம்

தி. முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் 24-3-50 மாலை 4 மணிக்குச் சென்னை 'மாலை மணி' அலுவலகததில் நடைபெற்றபோது வந்திருந்த செயற்குழு உறுப்பினர்களும் நிறைவேறிய தீர்மானங்களும், தோழர்கள் சி. என். அண்ணுதுரை (பொதுச் செயலாளர்) இரா. நெடுஞ்செழியன் (பிரசாரக்குழு செயலாளர்) என். வி. நடராசன் (அமைப்புக்குழு செயலாளர்) காஞ்சி. மணிமொழியார் (நிதிக்குழு செயலாளர்) கே. ஏ. மதியழகன் (சட்ட திட்டக்குழு செயலாளர்) கே. கே. நீலமேகம் (குடந்தை) எம். எஸ். சிவசாமி (தூத்துக்குடி) ஜி. பி. சோமசுந்தரம் (பேளுக்குறிச்சி) ஏ. சித்தையன் (சேலம்) இரா. சாம்பசிவம் (குறிஞ்சிப்பாடி) குமாரதணிகாசலம் (கள்ளக்குறிச்சி) சி. பஞ்சாட்சரம் (மதுராந்தகம்) ஜி. பராங்குசம் (பொன்மலை) சபத்தாம்பாளையம் பழனிச்சாமி, வடிவேலு (முல்லைக்கொம்பை) ஈ. வி. ஏ. வள்ளிமுத்து (கோயில்பட்டி) வி. எம். ஜான் (நாஞ்சல் நாடு) டி. எம். பார்த்தசாரதி (சென்னை) கே. எம். கண்ணபிரான் (சென்னை) எஸ். முத்து (மதுரை), சௌரிராஜன் (பட்டுக்கோட்டை).

சென்னை மாவட்டக்தொழிலாளர் தோழர் கே. கோவிந்தசாமி பிரத்தியேக அழைப்பின் பேரில்நடவடிக்கையில்கலந்து கொண்டார்.

செயற்குழுக்கூட்டத்திற்கு வர இயலாமைக்குவருந்தியும், முடிவை ஏற்றுக்கொள்வதாகவும் தோழியர் சத்தியவாணிமுத்து (சென்னை) தோழர்கள் ஆசைத்தம்பி (விருதுநகர்) அம்பில் தர்மலிங்கம், சி. பி. சிற்றரசு (வேலூர்), ஈ. வி. கெ. சம்பத் (ஈரோடு), பி எம். அப்பாதுரை (பெங்களூர்) அனுப்பப்பட்ட கடிதங்கள் செயற்குழுவில் வாசிக்கப்பட்டது.

கூட்டத்துவக்கத்தில் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணுதுரை கூட்ட நிகழ்ச்சிக்கானவற்றைவிளக்கி உறுப்பினர்களைத் தங்கள் கருத்துக்களை வெளியிடும்படி கேட்டுக்கொண்டார்.

தலைமைக் கழகத்துக்குச் சென்னையில் சொந்தக் கட்டிடம் வாங்குவதுபற்றியும், இயக்கத்தின் பேச்சுரிமை எழுத்துரிமை ஆகியவைகள் மீது அரசியலார் தொடுக்கும் அடக்கு முறைகளை (வழக்கு முதலியன) தலைமைநிலையமே பொறுப்பேற்று நடத்துவதா என்பது பற்றியும், உறுப்பினர் சேர்க்கும் காலவரையறை நீடிப்பது பற்றியும், உறுப்பினர்கள் தங்கள்கருத்துக்களை விளக்கினர்கள்.

சட்ட திட்டக்குழு செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் அக்குழுவினுல் தயாரிக்கப்பட்ட சட்டதிட்ட விதிகளை உறுப்பினர்களுக்குப் படித்துக் காண்பித்தார்.

அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் இதுவரை தலைமைக் கழகத்துக்குவந்துசேர்ந்துள்ள உறுப்பினர்கள் பட்டியல் விவரத்தை மாவட்ட வாரியாக (ஜில்லா வாரியாக) எடுத்துரைத்து, மாவட்ட அமைப்பாளர்கள் அதிக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சென்னையில் தலைமைக் கழகத்துக்குச் சொந்தமாகக் கட்டிடம் வாங்க வேண்டுவதோடு, தலைமைக் கழக அன்றாட அலுவலைக் கவனிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று இக்குழு தீர்மானிக்கிறது.

2. இயக்கத் தோழர்கள் மீதும், இயக்கக் கொள்கை மீதும் பேச்சுரிமை எழுத்துரிமை பாதிக்கும் வகையில் அரசியலார் தொடுக்கும் வழக்குகளைத் தலைமை நிலையமே ஏற்று நடத்தவேண்டுமென்று இக்குழு தீர்மானிக்கிறது.

3. பொது உறுப்பினர் சேர்க்கும் கடைசி தேதி 1950 ஜூன் 30-ந் தேதிவரை நீடிப்பதுடன், அதற்குள்ளாக மாவட்டக் குழுவினர் துரிதமான ஏற்பாடுகளுடன் உறுப்பினர் சேர்க்கவேண்டுமென்று இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

4, சட்ட திட்டக்குழுவினர் சமர்ப்பித்த சட்டதிட்டத்தை, குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி, அவர்களுடைய திருத்தங்களுடன் பொதுக் குழுவில் பின்பு நிறைவேற்ற வேண்டுமென்று இக்குழு தீர்மானிக்கிறது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் செயல்முறைக்கு கொண்டுவரச் செயற்குழு உறுப்பினர்களும், கிளைக்கழகத்தினரும், ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதுடன், இயக்க சம்பந்தமான மற்றும் பலவற்றை விளக்கி, பின் செயற்குழு உறுப்பினருக்கு பொதுச்செயலாளர் தோழர் அண்ணுத்துரை நன்றி தெரிவித்துக் கொண்டார்.

காமின்பார்ம் ஆள்பலம் திரட்டுகிறது

லண்டன், மார்ச். 28—

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள தொழிலாளர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அவசியமான வினில் ராணுவத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க பயன்படுத்திக் கொள்ள, காமின்பார்ம் ஒரு திட்டத்தை வகுத்து வருவதாகத் தெரிகிறது என்று, மத்திய ஐரோப்பாவிலிருந்து இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

ஜெக்கோஸ்லவாகியா, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி இவைகளுக்கிடையே நகைத் தொழிற் சங்கங்களை இணைப்பதற்கான உடன்படிக்கை சீக்கிரமே கையெழுத்தாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமாக இந்தத் தொழிலாளர் ஐக்கிய இணைப்பு இயக்கத்தின் தலைமை ஸ்தலம் பிரேக்காகவே இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

எந்த ஆட்கள் தேவைப்பட்ட இருந்தாலும் உடனே ஆட்களை வேலையில் ஈடுபடுத்தி உற்பத்தி பாதிக்காமல் இருக்கும்படி செய்யவே இந்த ஏற்பாடாம்.